கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016
(ஆகஸ்ட்/செப்ரம்பர் 2018)

# PSS 3213 மனிதவுரிமை பற்றிய விடயங்கள்
# Salient Feature of Human Rights

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

எழுத்துக்கள் தெளிவாக அமைதல் வேண்டும்.

---

## பகுதி – I

01. பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துக.
(அ) "உரிமை" என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)
(ஆ) மனிதவுரிமைகளின் வரலாற்று வளர்ச்சியைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

02. (அ) மனிதவுரிமைகளின் நவீன வகைப்படுத்தலை விளக்குக. (10 புள்ளிகள்)
(ஆ) மனிதவுரிமைகளைப் பாதுகாக்கும் மூலங்களைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

03. உரிமைகள் தொடர்பான
(அ) ஐ.நா.சபையின் பிரகடனம் (10 புள்ளிகள்)
(ஆ) மனிதவுரிமைகள் பற்றிய ஆசிய ஏற்பாடுகள் என்பவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் காணப்படும் அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகளைக் குறிப்பிட்டு அதன் பாதுகாப்புப் பொறிமுறையின் இயலளவுத் தன்மையை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

05. "மனிதவரிமைகளை இழந்து நிற்கும் அரசியற் சமுகமொன்றில் சுதந்திரப் போராட்டமொன்று மௌனிக்கப்பட்டுள்ள நிலையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் பங்கு மகத்தானது" விமர்சிக்குக. (20 புள்ளிகள்)

06. "பெற்றோரின் கவனயீனமே சிறுவர் துஸ்ப்பிரயோகத்திற்குள்ளாக்கப்படுவதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றது" ஏற்பீரா? உமது விடையை உதாரண சம்பவங்களுடன் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

07. "தகவலறியும் சட்டம்" இலங்கையில் மனிதவுரிமைகளை வென்றெடுப்பதில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தலாம் என்பதை பகுத்தாராய்க. (20 புள்ளிகள்)

*****